2024 ஜூன் 29]

(ஏ) சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகள், மெட்ரோ இரயில் பணிகளால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நடைபெறும் Metro Rail பணிகளால் கடும் போக்குவரத்து நெரிசல் குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(ஐ) Foxconn நிறுவனத்தில் திருமணமான பெண்களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (மணியடிக்கப்பெற்றது). . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் குற்றச்சாட்டு சொல்லும்போது, அதனுடைய ஆதாரத்தை என்னிடம் தந்துவிட்டு சொல்லியிருக்க வேண்டும்.*

திருமதி வானதி சீனிவாசன்: *இதுதொடர்பாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. வேறு கவன ஈர்ப்பு இருந்தால் சொல்லுங்கள். என் கவனத்திற்குத் தந்தீர்களென்றால், அதற்குரிய ஆதாரம் இல்லாத விஷயங்களைச் சொல்லக் கூடாது. இதை நீக்கிவிடுகிறேன். வேறு ஏதும் கவன ஈர்ப்பு இருந்தால் சொல்லுங்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *Foxconn நிறுவனத்தில் அங்கு வேலைக்கு எடுக்கக்கூடிய பெண்கள் திருமணமானவர்களாக இருந்தால், அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவது இல்லை. இதுபோன்று அந்த நிறுவனத்தில் நடப்பதாகத் தகவல்கள் வந்ததையொட்டி, ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதுகுறித்தும் அரசினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*